கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்திட வேண்டுமென பல்வேறு தரப்பினரும், அரசியல் கட்சியினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முற்பகல் 11-15

எனவே, திரு. சிவாஜி கணேசன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், மணிமண்டபம் அமைக்க தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள இடத்தில் மறைந்த நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் அவர்களுக்கு தமிழக அரசு சார்பாக மணிமண்டபம் அமைக்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் ஒரு முக்கியமான அறிவிப்பைப் படித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றி சொல்ல வேண்டுமென்று விரும்புகிறார்கள். (குறுக்கீடு) நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். இதை முடித்துவிட்டு பிறகு நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நேற்றுகூட நான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன், நீங்கள் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றி சொல்லி முடித்த உடனேயே உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்கள் முக்கியமான அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றி சொல்லட்டும்.

## 3. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்தல்—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், திராவிட இயக்கத்தினுடைய தந்தை பெரியார் ஆக தமிழகத்தினுடைய முப்பெரும் தலைவருடைய அன்பைப் பெற்ற தமிழ் திரையுலகில் அவருடைய பாதிப்பு இல்லாமல் இனி ஒரு

நடிகரே வர முடியாது என்கிற வகையிலே நடிப்பிற்கு இலக்கணமாக இருந்து ஆஸ்கர் விருது பெறத் தகுதி பெற்ற நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு கலைத் தாயின் மூத்த மகளாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தமிழக ரசிகர் பெருமக்களின் நீண்ட நாள் கனவை நிறைவேற்றுகிற வகையிலே அடையாறு பகுதியிலே மணிமண்டபம் கட்டுவதற்கு திட்டமிட்டு, அதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள் என்கிறபோது தமிழகத்தினுடைய கலைத் துறையே அவரை வாழ்த்தும், பாராட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) கலை சுவைஞர்களாக இருக்கக்கூடிய ஒவ்வொருவரும் வாழ்த்துவார்கள். ஆக, கடந்த வரலாற்றில் மதிக்காத, போற்றாத யாரும் புதிய வரலாற்றை உருவாக்க முடியாது என்கிற வகையிலே, ஒரு புரட்சி சிந்தனைக்கு வித்திட்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கலைத் துறைக்கு இன்றைக்கு மணிமகுடம் சேர்த்து கலைத் துறையால் இவருக்கு ஒரு மணிமண்டபம் என்கிறவகையிலே, ரசிகர்களுடைய மணிமகுடத்தைப் பெறுகிறவகையிலே இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார். வாழ்த்தி, பாராட்டி நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றியோடு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு காவேரியில் கல்லணை கட்டிய கரிகால் சோழனுக்கும் மணிமண்டபம் கட்டி இலக்கியத் துறையிலே, சமூகத் துறையிலே, பல்வேறு வாழ்வாதாரத் துறைகளிலே சமூகத்திற்குத் தொண்டாற்றிய சான்றோர் பெருமக்களை எல்லாம் நினைவூட்டுவதிலே, சமகாலத்துச் சமூகம் அறிந்துகொள்ளச் செய்வதிலே இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மானுட சமூகத்திற்கு வழிகாட்டிய சான்றோர்களை நேசிக்கத் தெரிந்த ஆட்சியாளர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தொடர்ந்து நினைவூட்டுகிற வகையிலே, தன் இன்னுயிரைத் தந்து, நாட்டிற்காகப் போராடிய தலைவர் பெருமக்களையெல்லாம் தமிழ்நாட்டினுடைய மிக முக்கியமான பகுதிகளிலே, அவர்களுடைய வாழ்விடங்களிலே அவர்களுக்கு நினைவு மணிமண்டபங்களைக் கோடிக்கணக்கான ரூபாயைச்

2015 ஆகஸ்ட் 26] [திரு. உ. தனியரசு]

செலவழித்து நிர்மாணித்து, சமகாலத்து சமூகமும் தியாகத்தைத் தெரிந்துகொள்ள வழிவகை செய்திட்ட அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

அதுபோன்று, திரைத் துறையிலே சுதந்திரப் போராட்ட காலத்திலே தியாகிகள் பட்ட கஷ்டங்களையெல்லாம் தன் அளப்பரிய நடிப்பாற்றலால் அது கப்பலோட்டிய தமிழனாக இருந்தாலும், வீரபாண்டிய கட்டபொம்மனாக இருந்தாலும் அந்த வரலாற்றுத் தலைவர்களை நினைவூட்டுவதிலே, வரலாற்று நிகழ்வுகளை நினைவூட்டுவதிலே தமிழ் நாட்டு மக்களுடைய நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கிற நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் அய்யா அவர்களுக்கு தலைநகர் சென்னையிலே அரசினுடைய செலவிலே மணிமண்டபம் அமைப்பதற்கு அனைத்து துறைகளுக்கும் தலைவியாய் இருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், கலைத் துறையிலே பல்வேறு விருதுகளைப் பெற்று அளப்பரிய சாதனைகளைச் செய்த பச்சைத் தமிழர் திரு. சிவாஜி கணேசன் அய்யா அவர்களுக்கும் மணிமண்டபம் கட்டுவதற்காக இன்று அறிவிப்பு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய இந்த அறிவிப்பை வரவேற்று, பாராட்டி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிப்புத் துறைக்கு இலக்கணம் வகுத்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முந்தைய தமது ஆட்சிக் காலத்தில் இடம் ஒதுக்கிக் கொடுத்து, இன்றையதினம் அவருக்கு மணிமண்டபம் கட்டித் தரப்படும் என்று அறிவித்து, சிறப்புச் செய்த இந்த நிலையை நான் பாராட்டுவது என்னுடைய கடமை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடிப்புத் துறையிலே இருந்து, இன்றையதினம் தமிழக முதல்வராக ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்று (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை நல்லமுறையில் வழிநடத்துகின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கலைத் துறையில் இலக்கணமாகத் திகழ்ந்த

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களையும், அரசியலிலே இருந்த தலைவர் பெருமக்களையும் தியாகிகளையும் மதிக்கின்ற அரசாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கலைத் துறையை மதித்து, கலைத் துறையிலே இருக்கின்ற நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மாபெரும் மணிமண்டபத்தை தமிழக அரசு கட்டிக் கொடுக்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி முழுமையாகப் பாராட்டி மகிழ்கிறது. நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

**திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட தியாகிகள் மற்றும் தமிழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்களுடைய நினைவாக பல மாவட்டங்களிலே மணிமண்டபங்களை அமைத்து, தமிழுக்குப் பெருமை சேர்த்துத் தந்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக நன்றியைக் கூறுகிறேன்.*

*இன்றையதினம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு ஓர் அழகான மணிமண்டபத்தைக் கட்டுவதாக அறிவித்திருக்கிறார்கள். சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் பார்க்க வேண்டும் இல்லை ஒரு கடவுளையே பார்க்க வேண்டும், வீரபாண்டிய கட்டப்பொம்மனைப் பார்க்க வேண்டும், சிவனைப் பார்க்க வேண்டுமென்று சொன்னால் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மூலமாகத்தான் நாம் சினிமாத் திரையிலே பார்த்துக்கொண்டிருந்தோம். அவருடைய நினைவாக மணிமண்டபம் அமைக்கின்ற இந்த நல்ல நிகழ்ச்சியில், இன்றையதினம் பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக நன்றி கூறி அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.*

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே அம்மாவின் மனசு பொன் மனசு. (மேசையைத் தட்டும் ஒலி) தேசத்தின் விடுதலைக்காக தங்களுடைய இன்னுயிரையெல்லாம் அர்ப்பணித்துக்கொண்ட பெருமகனார்களைப் பாராட்டுவதிலும், போற்றுவதிலும் அம்மாவுக்கு நிகர் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்ச் சான்றோர்கள், தமிழ்ப் பெரியோர்கள், ஆற்றல் மிக்கவர்கள், அறிவாளிகள், புத்திசாலிகள் இப்படி சமுதாயத்திலே சிறந்து விளங்கக்கூடிய பெரியவர்களை எல்லாம் பாராட்டுகின்ற மனசு அம்மாவின் மனசு. (மேசையைத் தட்டும் ஒலி)

நடிகர் திலகம் பத்மஸ்ரீ சிவாஜி கணேசன் அவர்களுடைய நடிப்பைப் பார்த்து பரவசப்பட்டவர்கள்தான் இந்த நாட்டிலே இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட நடிகர் திலகம் பத்மஸ்ரீ சிவாஜி கணேசன் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கின்ற அறிவிப்பை நான் மனதார வரவேற்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் இப்படிப்பட்ட அறிவிப்புகளையெல்லாம் அறிவிப்பதன்மூலம் எதிர்கால இளைஞர்கள் தங்களை அந்தத் தலைவர்களின் வரிசையிலே ஈடுபடுத்திக்கொள்வதற்கு இதுவொரு முன்னுதாரணமாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். உதாரணமாக, நம்முடைய மேதகு அப்துல் கலாம் அவர்களுடைய நினைவாக அறிவிப்பு செய்த "இளைஞர் எழுச்சி தினத்தையும்", அதேபோல் I.S.R.O. Scientist திருமதி என். வளர்மதிக்கு வழங்கிய விருதினையும், மற்ற இளைஞர்கள் பார்க்கின்றபோது, தங்களையும் அந்த விருதுகளையெல்லாம் பெறுவதற்குத் தயார்படுத்திக்கொள்ளக்கூடிய ஓர் ஆற்றல் இளைஞர்களிடத்தில் வரும். அதற்காகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இப்படிப்பட்ட அறிவிப்புகளையெல்லாம் வெளியிடுகிறார்கள் என்பதை நான் வரவேற்கின்றேன், பாராட்டுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிகர் திலகம் பத்மஸ்ரீ சிவாஜி கணேசன் அவர்களும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் காங்கிரஸ் பேரியக்கத்தில் ஒரிஜினலாக இருந்தவர்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திருமதி விஜயதரணி, நீங்கள் பாராட்டிப் பேசுவதாக இருந்தால், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் எந்த ஒரு கட்சிக்கும் சொந்தமானவர் அல்ல. அவர் இந்த நாட்டுக்கே சொந்தமானவர். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கு, தமிழ் நடிகர்களை ரசிக்கும் தமிழர்களுக்குச் சொந்தமானவர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவரை ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடைக்க முற்பட வேண்டாமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திருமதி விஜயதரணி, நீங்கள்* controversy *ஆக ஏன் பேசுகிறீர்கள், உட்காருங்கள். உங்கள் கட்சி சார்பாக திரு. ரெங்கராஜன் அவர்களைப் பேச அழைக்கின்றேன். (குறுக்கீடு) நீங்கள் பாராட்டிப் பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிகர் திலகம் அவர்கள் ஆற்றியிருக்கக்கூடிய பணிகள் சிறப்பானவை. இது தமிழகத்தில் மட்டுமல்லாமல், உலக அளவில் தெரிந்த ஒன்று. எல்லோருக்கும் சொந்தமானவர் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இருப்பினும், அவரின் மணிமண்டபத்திற்கு ஓர் இடமும் வழங்கி, நிறைவேறாத சூழ்நிலையில் அதைக் கண்டறிந்து, இப்போது அதற்கு நிதி ஒதுக்கியிருப்பது, மணிமண்டபம் அமைக்க வேண்டுமென்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்தாக இருந்து, அறிவித்திருப்பது நமக்கெல்லாம் சந்தோஷத்தை ஏற்படுத்துகிறது. அப்படித்தான் நான் கூறவிழைந்தேன். ஆனால், அதில் எனக்கு ஒரு பெருமை. அவர் எங்கள் கட்சியிலும் இருந்தார் என்பதற்காக, வேறு ஒன்றும் இல்லை. அதேமாதிரி, கடந்த ஆட்சியில் அவரின் சிலையையும் சென்னையில் அமைத்தார்கள். அப்படியெல்லாம் பார்க்கும்போது, நமக்குப் பெருமையாக இருக்கிறது. அதனால்தான் பாராட்டுகின்றோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி விஜயதரணி, உங்களுக்கு controversy இல்லாமல் ஏன் பேசத் தெரியவில்லை? மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் மாண்புகளை, மரபுகளை, பண்புகளையெல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே விரிவாக எடுத்துச்சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள், சிவாஜி கணேசன் அவர்கள் ஒருகாலத்தில் காங்கிரஸ் கட்சியில் இருந்ததாக இங்கே குறிப்பிட்டுச் சொன்னார். உங்கள் கட்சியின் சமாச்சாரமே வேண்டாமென்றுதான் தமிழக முன்னேற்ற முன்னணி என்ற ஒரு கட்சியை ஆரம்பித்து, உங்களைவிட்டுச் சென்று வெகுதொலைவில் அவர் விலகி நின்றார் என்பதையும் இங்கே பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கு என்று பல்வேறு பெருமைகள் உண்டு. அந்தப் பெருமைகளில் ஒன்று மரியாதைக்குரிய, மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள். நடிப்பு உலகின் பல்கலைக்கழகமாக விளங்கிய அவருக்கு வருங்கால சந்ததியினர் என்றென்றும் அவரின் நினைவைக் கூறக்கூடியவகையிலே இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இடம் கொடுத்து மணிமண்டபத்தையும் கட்டிக் கொடுப்பதாக அறிவித்துள்ளார்கள். இதனால், தஞ்சை மண்ணே மகிழ்ச்சிகொள்கிறது. அந்தவகையிலே, தஞ்சை மக்களின் சார்பாகவும், அவரின் ரசிகன் என்ற முறையிலும், நமது மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலை, மனிதகுலத்தின் பிரிக்கமுடியாத ஓர் அங்கம். அந்த அடிப்படையில் மனிதகுலத்தின் நாகரிகத்தை,

வருங்காலத்தை, கடந்த காலத்தைப் பறைசாற்றுவது கலைஞர்களுடைய மாபெரும் கடமையாக இருந்திருக்கிறது. பொதுவாக, தமிழகத்தில் கலைஞர்களைப் போற்றுகின்ற பண்பாடு காலம் காலமாக, வழிவழியாக, வந்துகொண்டிருக்கிறது. அந்தவகையில், தமிழ்நாட்டில் பிறந்து 60 ஆண்டு காலத்திற்கும் மேலாக, தமிழ்ச் சினிமாவில் மட்டுமல்ல, இந்திய சினிமாவில், உலக சினிமா கலைஞர்கள் மத்தியில் ஓர் எடுத்துக்காட்டு கலைஞராக வாழ்ந்தவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள். அவருடைய நடிப்பாற்றல் என்பது அந்தப் பாத்திரத்தைப் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு அந்தப் பாத்திரத்தோடு ஒன்றி, அந்தப் பாத்திரத்தின் மறுஉருவமாக, தனது நடிப்பாற்றலை வெளிக்காட்டியவர். அந்தவகையில் இன்றைக்கு அவருக்கு மணிமண்டபம் அமைத்ததை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். அதோடு இளம் வயதில் நான் சிவாஜி ரசிகன் என்ற முறையிலும், தனிப்பட்ட முறையில், மணிமண்டபம் அமைப்பதாக அறிவித்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன் அவர்கள்.

முற்பகல் 11-30

***திரு. செ. அருண் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதுபோல் அவரை ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடைக்க முற்படக் கூடாது. நடிகர்கள் சார்பில், நடிப்பு குடும்பத்தைச் சார்ந்த நான் சொல்கிறேன், சினிமாத் துறை நிச்சயம் உங்களை மறக்கவே மறக்காது அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) 100 வருட சினிமா, அது ஒரு சிறப்பு. அதோடு பெரிய சிறப்பு இதுதான். எந்த ஒரு நடிகரும் அவர் நடித்ததைப் பார்க்காமல், அவருடைய சின்ன ஜாடைகூட இல்லாமல் நடிக்கவே முடியாது. மீண்டும் உங்களுக்கு மிகப் பெரிய நன்றி. மீண்டும் ஒரே ஒரு கோரிக்கை. எப்பொழுது எங்களுடைய Brand மாறும்? நன்றி, வணக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: எழில் கொஞ்சும் தமிழகத்தின் இணையில்லா புதிய சரித்திரமே! எதிர்ப்பவருக்கு என்றென்றும் நீங்கள் ஒரு சிம்ம சொப்பனமே! 8 கோடி தமிழர்களைக் காக்கும் எங்கள் காவல் தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) பொற்கால முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன். சரித்திரம் போற்றும் வரலாற்று நாயகர்களுக்கும், சாதனைகள் புரிந்த தியாகச்சீலர்களுக்கும், மணிமண்டபங்கள் எழுப்பியும், நினைவுச் சின்னங்கள் அமைத்தும், அவர்களின் புகழுக்குப் பெருமை சேர்த்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் கோரிக்கையைச் சொல்கின்றவர்கள் யார் என்று பார்ப்பது கிடையாது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், சுவாமி சகஜானந்தாவுக்கு மணிமண்டபம் வேண்டுமென்று கோரினார். புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக அறிவித்தார்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. சு. குணசேகரன் அவர்கள், வீரமங்கை வேலுநாச்சியாருக்கு நினைவு மண்டபம் அமைக்க வேண்டுமென்று கோரினார். புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக அறிவித்தார்கள். தியாகி சங்கரலிங்க நாடார் அவர்களுக்கு விருதுநகரிலே நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்று திரு. பொன்னுப்பாண்டி அவர்கள் கோரினார். இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். ஆகவே, கேட்கின்றவர்கள் யார் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் பார்ப்பது கிடையாது. கேட்கின்ற கோரிக்கைகள் நியாயமாக இருந்தால், அதை உடனடியாக அறிவிக்கின்ற தலைவி, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே இன்று தமிழகத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளும், பல்வேறு அரசியல் வல்லுநர்களும் எழுப்புகின்ற கோரிக்கையான திரைப்பட நடிகர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு, தென் இந்திய நடிகர் சங்கத்திற்குக் கொடுத்த இடத்திலே இன்னும் நினைவிடம் கட்டப்படாமல் இருப்பதை நினைவில் கொண்டு, இன்றைக்கு மணிமண்டபம் கட்டுவதற்கு அனுமதியளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு செய்தித் துறையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *கண்ணன், கர்ணன், காத்தவராயன், காளிதாசன் என காவியப் பாத்திரங்களையும், கலியுக புருஷர்களையும், கனவு நாயகர்களையும், கண்கண்ட ஞானிகளையும் நம் கண் முன்னே காண வைத்து, ஓவியமாக்கி, காவியமாக்கியவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள்.*

*கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், பாரதியார் என்றால் அவர்கள் இப்படித்தான் என உருவம் கொடுத்து, மக்கள் மனதிலே பதிய வைத்த அந்த அறிவாளி, அந்த அன்புக்கரம், பச்சை விளக்கு, படிக்காத மேதை, பாசமலர், பாரத விலாசுக்கு, தவப் புதல்வன் அமர தீபத்திற்கு, நான் வணங்கும் தெய்வம், மக்கள் போற்றும் மகராசி, (மேசையைத் தட்டும் ஒலி) கை கொடுக்கும் தெய்வம், கலை உலகைக் காத்திடும் காவல் தெய்வம், அரசு சார்பில் மணிமண்டபம் கட்ட அறிவிப்புச் செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிறந்த அறிவிப்பினை நம் நெஞ்சிருக்கும் வரை அவர் ஒரு சரித்திரம் என்பதை புண்ணிய பூமி மறவாது. மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 4. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின், என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தந்திருக்கக்கூடிய ஒத்திவைப்புத் தீர்மானங்கள் ஏறக்குறைய 22 இருக்கின்றன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் அறிவிப்பு கொடுத்து 2 நாட்கள்தான் ஆகியிருக்கின்றன. அவை அனைத்தையும் துறைகளுக்கு பதில் கேட்டு அனுப்பியிருக்கிறோம்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *அதிலே முக்கியமாக மேகதாது பிரச்சினை, N.L.C. பிரச்சினை. அதையாவது முன்கூட்டியே எடுத்துக்கொள்ளுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் கொடுத்த அறிவிப்புகளையெல்லாம் துறைகளுக்கு அனுப்பியிருக்கிறோம். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. துறைகளிடமிருந்து*